
P5

SA - 2

<u>சுத்தமாக இரு</u>

தாள் - 1



இடைவேளை
சுத்தப்படுத்த
அக்கறையின்றி
காற்பந்து

ஆசிரியர்
வகுப்பறையை
அசுத்தமாக
கண்டித்தார்

252

P5 / SA2 - 1

www.testpapersfree.com

தேர்வுத்தாள் - 1
SA - 2

Q1 *முதல்* Q23 *வரையுள்ள வினாக்களுக்கு* OAS *விடைத்தாளில், சரியான விடையின் எண்ணுள்ள (*1, 2, 3 *அல்லது* 4) *நீள்வட்டத்தை நிழலிடு.*

*'அ ' பிரிவு*

**A1 வேற்றுமை**

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான *வேற்றுமை உருபு* ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

அசீனாவின் பாட்டி மணியனின் அண்டை வீட்டில் வசிக்கிறார். அவர் ஒருநாள் அடுக்குமாடி வீட்டின் ____(1)____ நின்றுகொண்டிருந்தார். அவர் இரண்டு கனமான பைகளைத் தூக்கிக்கொண்டிருந்தார். அதை மணியன் பார்த்தான். அவன், "பாட்டி, பைகளை நான் தூக்கிக்கொண்டு வருகிறேன்," என்று சொன்னான். பாட்டி ____(2)____ ஒரு பையை மட்டும் கொடுத்தார். மணியன் பையை ____(3)____ வீடுவரை தூக்கிக்கொண்டு வந்தான். ____(4)____ அடைந்ததும் பாட்டி மணியனுக்கு நன்றி கூறினார். அவன், "அதற்கு என்ன பரவாயில்லை பாட்டி," என்று ____(5)____ சொன்னான். நாமும் மணியனைப்போல ____(6)____ உதவி செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதில் ஏற்படுகின்ற மனநிறைவு வேறு எதிலும் இல்லை.

Q1. (1) கீழ்த்தளத்திற்கு
(2) கீழ்த்தளத்தில்
(3) கீழ்த்தளத்தோடு
(4) கீழ்த்தளத்தால்
( )

Q2. (1) மணியனிடம்
(2) மணியனுக்கு
(3) மணியனிடமிருந்து
(4) மணியனோடு
( )

Q3. (1) பாட்டியின்
(2) பாட்டியை
(3) பாட்டியிடமிருந்து
(4) பாட்டியால்
( )

Q4. (1) வீட்டில்
(2) வீட்டின்
(3) வீட்டை
(4) வீட்டுக்கு
( )

Q5. (1) மகிழ்ச்சியின்
(2) மகிழ்ச்சியால்
(3) மகிழ்ச்சியுடன்
(4) மகிழ்ச்சிக்கு
( )

Q6. (1) மற்றவர்களோடு
(2) மற்றவர்களுடன்
(3) மற்றவர்களை
(4) மற்றவர்களுக்கு
( )



25

www.testpapersfree.com

A2 செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள *செய்யுள் / பழமொழியை* நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(12 மதிப்பெண்கள்)

Q7. ஒருவர் _______________ இருவர் நட்பு

(1) பொறை
(2) அமைதி
(3) பொறுமை
(4) பணிவு

( )

Q8. _______________ காக்கின் சினங்காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்.

(1) உன்னைத்தான்
(2) அவனைத்தான்
(3) தன்னைத்தான்
(4) என்னைத்தான்

( )

Q9. நிழலின் அருமை _______________ தெரியும்.

(1) பகலில்
(2) இரவில்
(3) மழையில்
(4) வெயிலில்

( )

Q10. காலத்தி னாற்செய்த உதவி _______________ ஞாலத்தின் மாணப் பெரிது.

(1) சிரமமெனினும்
(2) சிறந்ததெனினும்
(3) பெரிதெனினும்
(4) சிறிதெனினும்

( )

Q11. இளமையில் சோம்பல் முதுமையில் _______________

(1) சிறுமை
(2) வெறுமை
(3) வறுமை
(4) கொடுமை

( )

Q12. ஈவது _______________

(1) விளம்பேல்
(2) விலக்கேல்
(3) கரவேல்
(4) கைவிடேல்

( )



254

www.testpapersfree.com

**<u>B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்</u>**
*பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி:*

புலவன் ஒருவன் பெருஞ்செல்வந்தர்களைப் புகழ்ந்து பாடி, அவர்கள் தரும் பரிசுப் பொருள்களைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தான். ஒவ்வொரு ஊராகச் செல்வந்தர்களைத் தேடிச் சென்று அவர்களைப் <u>புகழ்ந்து</u> பாடுவது அவன் வழக்கம்.

இப்படியே தன் பயணத்தின்போது அவன் ஓர் ஊரை அடைந்தான். வழியில் சந்தித்த ஒருவரிடம், "இந்த ஊரிலேயே மிகப் பெரிய பணக்காரர் யார்?" என்று கேட்டான். உடனே வழிப்போக்கன், அந்த ஊரிலேயே யாருக்குமே உதவி செய்யாத பெரும் கருமி என்று பெயரெடுத்த ஒரு செல்வந்தனின் வீட்டைப் புலவருக்குக் காட்டினான்.

புலவன் அங்கே சென்றான். அரண்மனையைப் போன்ற அந்த வீட்டைப் பார்த்ததும் புலவனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. மிகுந்த ஆர்வத்தோடு அவன் செல்வந்தனின் வீட்டின் கதவைத் தட்டினான். வட்டிக்குப் பணம் வாங்கத்தான், எவனோ கதவைத் தட்டுகிறான் என்ற எண்ணத்தில் கருமி கதவைத் திறந்தான். எதிரே நிற்பவனின் <u>தோற்றத்தை</u>க் கண்ட கருமி, புலவன் அவனைப் புகழ்ந்து பாடிப் பரிசுப்பெற வந்திருக்கிறான் என்ற உண்மையை அறிந்தான். இவனிடமிருந்து எப்படித் தப்பிக்கப் போகிறோமோ என்று நினைத்து வருந்தினான் கருமி.

கருமியின் மனநிலையைச் சற்றும் உணராத புலவன், கருமி தன் பாடலைக் கேட்டு வாரி வாரி வழங்கப் போகிறான் என்று எண்ணிப் பாட ஆரம்பித்தான். "ஐயா! நீங்கள் கேட்டதையெல்லாம் கொடுக்கும் பசு காமதேனு போன்றவர்; விரும்பியதையெல்லாம் தரும் கற்பக மரம்; வந்தவர்களுக்கெல்லாம் பணத்தை வாரி வாரி வழங்கிய அரிச்சந்திர மன்னனைப் போன்றவன்," என்று புகழ்ந்து பாடினான்.

இதைக் கேட்டதும் கருமியின் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. பணம் எதுவும் கொடுக்க விரும்பாத அவன், "புலவனே! நீ வேண்டுமென்றே என்னைத் திட்டிவிட்டாய்!" என்று கூறினான். "காமதேனு ஒரு மாடு, அப்போது என்னையும் மாடு என்று திட்டுகிறாயா? அரிச்சந்திரன் வாரி வாரி வழங்கியே ஏழையாகி, அடிமையும் ஆகிவிட்டான். என்னையும் அதுபோல் போகச் சொல்கிறாயா? நீ திட்டம் போட்டு என்னைப் பழிக்க வேண்டும் என்பதற்காகவே பாடல் எழுதி வந்திருக்கிறாய்! என் கண்முன் நில்லாதே!" என்று கோபத்துடன் கத்தினான் கருமி.

அதிர்ச்சியால் புலவனுக்கு நாவடைத்துப் போனது. பசித்தீர உணவளிக்கும் காமதேனுவை மாடு என்றும், வாரி வாரி வழங்கிய வள்ளலாகிய அரிச்சந்திரனை ஏழை, அடிமை என்றும் கருமி கூறியது புலவனின் மனத்தைப் <u>புண்படுத்தியது</u>. அதிகப் பணம் கிடைக்கும் என்ற பேராசையில், நல்ல குணம் இல்லாதவனைப் போற்றிப் பாடியது



25!

www.testpapersfree.com

தன் தவறுதான் என்று உணர்ந்தான் புலவன். அன்றுமுதல் புலவன் தன்னிடமிருந்த பேராசை குணத்தை விட்டொழித்தான்.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13. புலவன் ஏன் ஊர் ஊராகச் சென்று பாட்டுப் பாடினான்?

(1) பெரிய செல்வந்தன் ஆவதற்கு
(2) பிறரது பாராட்டைப் பெறுவதற்கு ( )
(3) செல்வந்தர்களுடன் நட்பு கொள்வதற்கு
(4) கிடைக்கும் பரிசுப் பொருள்களைக் கொண்டு வாழ்க்கை நடத்துவதற்கு

Q14. வழிப்போக்கன் யாருடைய வீட்டைப் புலவனிடம் காட்டினான்?

(1) செல்வந்தனான ஒரு கருமியினது வீட்டை
(2) ஒரு பேராசைக்காரன் வீட்டை
(3) கருமியாக இருந்து வள்ளலாக மாறியவன் வீட்டை ( )
(4) மிகுந்த செல்வந்தன் என்று பெயரெடுத்தவன் வீட்டை

Q15. கருமி புலவனைக் கண்டு வருந்தியதற்குக் காரணம் என்ன?

(1) வட்டிக்குப் பணம் வாங்க ஆள் வரவில்லை என்பதற்காக
(2) தான் எதிர்பார்த்தவர் வரவில்லை என்பதற்காக
(3) புலவனிடமிருந்து தப்பிக்க வழி தெரியவில்லை என்பதற்காக ( )
(4) புலவனுக்குப் பரிசளிக்க வேண்டுமே என்பதற்காக

Q16. செல்வந்தன் புலவனின் பாடலுக்கு மாறான கருத்தைக் கூறியதற்குக் காரணம் என்ன?

(1) அவனுக்குப் பாடலின் பொருள் விளங்காததால்
(2) அவன் புலவனை நம்பாததால்
(3) அவனுக்குப் புலவனின் தோற்றம் பிடிக்காததால் ( )
(4) அவன் புலவனை எப்படியாவது விரட்டிவிட எண்ணியதால்

Q17. எது புலவனுக்கு நல்ல பாடத்தைப் புகட்டியது?

(1) நல்ல பண்புகுன்றியவரைப் போற்றிப் பாடியது
(2) மிகப் பெரிய பணக்காரர்களைத் தேடிச் சென்றது
(3) ஊர் விட்டு ஊர்ச் சென்று பாடியது ( 2 )
(4) அறிமுகமில்லா வழிப்போக்கனின் பேச்சைக் கேட்டது



256

www.testpapersfree.com

**<u>B4 சொற்பொருள்</u>**

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் *<u>பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.</u>* அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(6 மதிப்பெண்கள்)

Q18. புகழ்ந்து

(1) வாழ்த்தி
(2) பாராட்டி
(3) மகிழ்வித்து
(4) வர்ணித்து

( )

Q19. தோற்றத்தை

(1) உருவத்தை
(2) ஆடையை
(3) நோக்கத்தை
(4) எண்ணத்தை

( )

Q20. புண்படுத்தியது

(1) சேதப்படுத்தியது
(2) கொடுமைபடுத்தியது
(3) பாடுபடுத்தியது
(4) காயப்படுத்தியது

( )



www.testpapersfree.com

C5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி :

# வசந்தி கடிகாரக்கடை

## ஆண்டிறுதியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை!

தேதி : 16-12-2010 முதல் 26-12-2010 வரை

திங்கள் முதல் வெள்ளி வரை: காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை

சனி மற்றும் ஞாயிறு:காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை


$600க்கு மேல் கைக்கடிகாரம் வாங்கும் முதல் 15 வாடிக்கையாளர்களுக்கு ஒரு கையடக்கத் தொலைபேசி இலவசமாகக் கிடைக்கும்!


கண்களைக் கவரும் உள்ளூர், வெளியூர் கைக்கடிகாரங்கள் மற்றும் சுவர்க்கடிகாரங்கள் மலிவு விலையில் விற்கப்படவுள்ளன.

பல புது புது 'டிசைன்' கடிகாரங்கள்

புத்தாண்டில் கடை வேறு இடத்திற்கு மாற்றப்படும்!

$300க்கு மேல் செலவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அதிர்ஷ்டக் குலுக்கில் பங்கேற்க ஒரு வாய்ப்பு





**அதிர்ஷ்டக் குலுக்கில் இருவருக்கு :-**

- பேங்காக் சென்றுவர **2** விமானச் சீட்டுகளும், **$500** ரொக்கமும் தரப்படும்.
- மூவருக்கு மலாக்கா சென்றுவரப் பேருந்து பயணச் சீட்டும், **$200** ரொக்கமும் வழங்கப்படும்!



www.testpapersfree.com

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ***ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.*** அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21. மலிவு விற்பனை எதற்காக நடைபெறுகிறது ?

(1) ஆண்டிறுதியை முன்னிட்டு

(2) கடை இடம் மாற்றம் ஏற்படவிருப்பதால் ( )

(3) புது 'டிசைன்' கடிகாரங்கள் இருப்பதால்

(4) வாடிக்கையாளர்களை மகிழ்விக்க

Q22. யாருக்கு கையடக்கத் தொலைபேசி இலவசமாக வழங்கப்படும்?

(1) $300 வெள்ளி செலவழிப்போருக்கு

(2) வசந்தி கடிகாரக் கடைக்கு வரும் முதல் 15 பேருக்கு ( )

(3) $600க்கு மேல் கைக்கடிகாரம் வாங்கும் முதல் 15 பேருக்கு

(4) $600க்குச் சுவர்க்கடிகாரம் வாங்கும் முதல் 15 பேருக்கு

Q23. பேங்காக் சென்றுவர வாய்ப்புக் கிடைக்கும் இருவருக்கு எது மேலும் மகிழ்ச்சி தரும்?

(1) அவர்களுக்குக் கிடைக்கப்போகும் பேருந்து பயணச் சீட்டு ( )

(2) அவர்களுக்குக் கிடைக்கப்போகும் $500 ரொக்கப் பணம்

(3) அவர்களுக்குக் கிடைக்கப் போகும் $500 பற்றுச்சீட்டு

(4) அவர்களுக்குக் கிடைக்கப் போகும் $200 ரொக்கப் பணம்

ைைை முற்றும் ைைை



25

www.testpapersfree.com

‘ஆ’ பிரிவு

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q 28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.
(10 மதிப்பெண்கள்)

Q24. திரு. பாலமுருகன் கடும் உழைப்பாளி. அவர் ______________ உறக்கமின்றி இரவும் பகலும் வேலை செய்தார். Q24 ( )

Q25. மாறனுக்கும் குமாருக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தில் மாறன் குமாரை அடித்துவிட்டான். தலைமையாசிரியர் மாறனை அழைத்து நடந்ததை ______________ சொன்னார். Q25 ( )

Q26. கலாவுக்கு வந்த கடித ______________ அவளுடைய தம்பி கிழித்துவிட்டான். அதை அறிந்த அவள் கோபமடைந்தாள். Q26 ( )

Q27. சிங்கப்பூரில் கடந்த மாதம் கனத்த மழை பெய்தது. அதனால், சில சாலைகளில் ______________ பெருக்கெடுத்து ஓடியது. Q27 ( )

Q28. சட்டவிரோத செயலில் சில இளையர்கள் ஈடுபட்டனர். காவலர்களைக் கண்டதும் அவர்கள் ______________ கொண்டனர். Q28 ( )

| | | | |
|---|---|---|---|
| (1) | ஒளிந்து | (2) | வெள்ளம் |
| (3) | விலக்க | (4) | உறையை |
| (5) | ஊன் | (6) | விளக்க |
| (7) | உரையை | (8) | ஒழிந்து |
| (9) | வெல்லம் | (10) | ஊண் |



26

www.testpapersfree.com

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் 29 முதல் 35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| ஓர் ஊரில் நான்கு நண்பர்கள் இருந்தனர். அவர்கள் நால்வரும் வேலை எதுவும் கிடைக்காததால் Q29.______________ வாடினர். வெளியூர் சென்று வேலை தேடலாம் என்று நினைத்துப் பக்கத்து ஊருக்குப் புறப்பட்டுச் சென்றனர். செல்லும் Q30.______________ அவர்கள் ஒரு முனிவரைக் கண்டனர். அவரை வணங்கித் தங்களின் நிலையை எடுத்துக் கூறினர். அதைக் கேட்ட முனிவர் அவர்கள் ஒவ்வொருவருடைய தலையிலும் ஒரு துணி முட்டையை வைத்தார். "அந்த உயரமான மலையில் Q31.______________. யாருடைய முட்டை கீழே விழுகிறதோ, அந்த இடத்தில் புதையல் கிடைக்கும்," என்று Q32.______________ அனுப்பினார். | Q29 ( ) <br> Q30 ( ) <br> Q31 ( ) <br> Q32 ( ) |
| அதைக் கேட்ட அந்த நால்வரும் மகிழ்ந்தனர். முனிவர் கூறியதுபோல் மலையை அடைந்தனர். சிறிது Q33.______________ சென்றதும் ஒருவனின் முட்டை கீழே விழுந்தது. அவ்விடத்தில் சில வெள்ளி Q34.______________ கிடந்தன. இது போதும் என்று Q35.______________ அவன் நிம்மதியாக வீடு திரும்பினான். மற்ற மூன்று நண்பர்களும் தங்களுக்கு அது போதாது என்று நினைத்து மேலும் தங்களின் பயணத்தைத் தொடர்ந்தனர். தொடர்ந்து சென்றவர்களுக்கு மேலும் பெரிய புதையல் காத்திருந்தது. | Q33 ( ) <br> Q34 ( ) <br> Q35 ( ) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | களைப்பில் | (2) | ஏறுங்கள் | (3) | வாழ்த்தி |
| (4) | தோண்டுங்கள் | (5) | தூரம் | (6) | இடத்தில் |
| (7) | நேரத்தில் | (8) | எண்ணி | (9) | வறுமையில் |
| (10) | திருந்தி | (11) | வழியில் | (12) | நாணயங்கள் |



261

www.testpapersfree.com

**D8** சுயவிடைக் கருத்தறிதல்
பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

ரங்கனுக்கு மூன்று புதல்விகள் இருந்தனர். மூவரும் மூன்று கடமைகளைச் செய்யும்படி ரங்கன் பிரித்துக் கொடுத்திருந்தான். தன் வீட்டுப் பசுக்களிடமிருந்து பால் கறப்பது முதல் மகளின் கடமை. தோட்டத்திலுள்ள பழமரங்களிலிருந்து பழங்களைப் பறிப்பது இரண்டாவது மகளின் கடமை. ரங்கனுக்குப் பணிவிடைகள் செய்வது மூன்றாவது மகளின் கடமை. மூன்று புதல்விகளும் சிறிது காலம் தங்களின் வேலைகளைச் சரியாகச் செய்து வந்தனர். ஒருநாள், அவர்களுக்குச் செய்யும் வேலையில் சலிப்பு ஏற்படத் தொடங்கியது. மற்றவர் செய்யும் வேலை சிறப்பாகவும் ஏற்புடையதாகவும் அவர்களுக்குத் தோன்றியது. இதனால் ஒருவருடன் ஒருவர் வாக்குவாதம் செய்யத் தொடங்கினர். இதன் காரணமாக வீட்டில் ஒரு வேலையும் சரியாக நடக்காததால் ரங்கன் வேதனைப்பட்டான்.

ஒரு நாள் ரங்கன் பெரியவர் ஒருவரைச் சந்தித்தான். அவர் அவனுடைய மனவருத்தத்திற்கான காரணத்தை விசாரித்தார். ரங்கனும் நடந்தவற்றைக் கூறினான். ரங்கனுடைய பிரச்சனைக்குத் தீர்வு காண்பதாகச் சொல்லிப் பெரியவர் அவனின் புதல்விகளைக் காணச் சென்றார். முதல் மகளிடம் சென்று, "நீ முற்பிறப்பில் ஒரு பசுவாக இருந்தாய். கோயிலிலுள்ள தெய்வத்திற்குத் தினமும் பால் கொடுத்தாய். அந்தப் புணியையே இப்போதும் செய்து வந்தால் நன்மை கிடைக்கும்." என்று கூறினார். அதைக் கேட்ட முத்த மகள் மகிழ்ச்சியாகத் தன் வேலையைத் தொடர்ந்து செய்தாள்.

இரண்டாம் மகளிடம் சென்ற பெரியவர், அவள் முற்பிறப்பில் கடவுளுக்குப் பழங்கள் கொடுக்கும் ஓர் அழகான மயிலாக இருந்ததாகக் கூறினார். இப்பிறப்பிலும், அவள் அவளது தந்தைக்குப் பழங்கள் பறித்துக் கொடுத்தால், மயிலைப் போல சிறப்பாக ஆடுவாள் என்று வாழ்த்தினார். புகழ்பெற்ற நடனமணியாக வேண்டும் என்ற ஆசை இருந்ததால் இரண்டாம் மகள், மன நிம்மதியுடன் தன் வேலைகளைச் செய்தாள்.

மூன்றாம் மகளிடம் பெரியவர், அவள் முற்பிறப்பில் ஒரு பருந்தாக இருந்ததாகவும், காட்டிலிருந்த தெய்வச் சிலைக்கு வெயில் படாமல் இருக்கத் தன் சிறகுகளை விரித்துப் பாதுகாத்ததாகவும் கூறினார். இப்போதும் அவளின் கடமைகளைச் செய்து வந்தால் நன்மையே விளையும் என்று எடுத்துரைத்தார். அதைக் கேட்ட அவள் தன் கடமைகளைச்



262

www.testpapersfree.com

செவ்வனே செய்தாள். மூன்று புதல்விகளும் தங்களது கடமைகளைச் சிறப்பாகச் செய்ததால் ரங்கனின் வீட்டில் மீண்டும் இன்பமும் அமைதியும் நிலவியது.

36 முதல் 41 வரை உள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36. ரங்கன் தன் மூன்று மகள்களுக்கும் என்னென்ன கடமைகளைக் கொடுத்திருந்தான்? (4)

37. எது ரங்கனுக்கு மனவருத்தத்தை அளித்தது? (3)

38. பெரியவர் முத்த மகளிடம் என்ன கூறி, ரங்கனின் பிரச்சனையைத் தீர்த்தார்? (4)



263

www.testpapersfree.com

39. இரண்டாம் மகளின் மனமாற்றாத்துக்குக் காரணம் என்ன? (4)

40. மூன்றாம் மகள் முற்பிறப்பில் எப்படி சேவை புரிந்தாள்? (3)

41. எப்போது ரங்கனின் வீட்டில் அமைதி உண்டாகியது? (2)





www.testpapersfree.com

Primary - 5 SA - 2

தேர்வுத்தாள்-1

அசீனாவின் பாட்டி மணியனின்......

1. 2 2. 1 3. 1 4. 3 5. 3 6. 4

7. 1 8. 3 9. 4 10. 4 11. 3 12. 2

13. 4 14. 1 15. 3 16. 4 17. 1

18. 2 19. 1 20. 4

21. 1 22. 3 23. 2

24. 10 25. 6 26. 4 27. 2 28. 1

29. 9 30. 11 31. 2 32. 3 33. 5 34. 12 35. 8

36. தன் வீட்டுப் பசுக்களிடமிருந்து பால் கறப்பது முதல் மகளின் கடமை. தோட்டத்திலுள்ள மரங்களிலிருந்து பழங்களைப் பறிப்பது இரண்டாவது மகளின் கடமை. ரங்கனுக்குப் பணிவிடை செய்வது மூன்றாவது மகளின் கடமை. இவையே ரங்கன் தன் மூன்று மகள்களுக்கும் கொடுத்திருந்த கடமைகளாகும்.

37. மூன்று மகள்களுக்கும் அவர்கள் செய்யும் வேலையில் சலிப்பு ஏற்பட்டு மற்றவர் செய்யும் வேலை சிறப்பாகவும் ஏற்புடையதாகவும் தோன்றி ஒருவருக்கொருவர் வாக்குவாதம் ஏற்பட்டு வீட்டில் ஒரு வேலையும் சரியாக நடக்காதது ரங்கனுக்கு மவருத்தத்தை அளித்தது.

38. மூத்த மகள் முற்பிறப்பில் ஒரு பசுவாக இருந்ததாகவும் அப்போது தினமும் கோயிலுள்ள தெய்வத்திற்கு தினமும் பால் கொடுத்ததாகவும் அந்தப் பணியையே இப்போதும் அவள் செய்து வந்தால் நன்மை கிடைக்கும் என்று பெரியவர் மூத்த மகளிடம் கூறி ரங்கனின் பிரச்சனையைத் தீர்த்து வைத்தார்.

39. முற்பிறப்பில் கடவுளுக்குப் பழங்கள் பறித்து கொடுக்கும் ஓர் அழகான மயிலாக இருந்த இரண்டாவது மகளுக்கு புகழ்ப்பெற்ற நடன மணியாக வேண்டும் என்ற ஆசை இருந்ததால் அவள் இப்பிறப்பிலும் அவளது தந்தைக்குப் பழங்கள் பறித்துக் கொடுத்தால் மயிலைப் போல் சிறப்பாக ஆடுவாள் என பெரியவர் வாழ்த்தியதே இரண்டாம் மகளின் மனமாற்றத்துக்குக் காரணம் ஆகும்.



www.testpapersfree.com

40. முற்பிறப்பில் பருந்தாக இருந்த மூன்றாவது மகள் காட்டிலிருந்த தெய்வச் சிலையின் மேல் வெயில் படாதவாறு தன் சிறகுகளை விரித்துப் பாதுகாத்து சேவை புரிந்தாள்.

41. பெரியவர் கூறியதைக் கேட்ட மூன்று புதல்விகளும் மனம் மாறி தங்களது கடமைகளைச் சிறப்பாகச் செய்த போது ரங்கனின் வீட்டில் அமைதி நிலவியது.



www.testpapersfree.com

Name : ____________________ (     )     Class : 5 (   ) /5TL (   )

# PRIMARY SCHOOL

## SECOND SEMESTRAL ASSESSMENT

## TAMIL LANGUAGE PAPER 2

## PRIMARY 5

## (BOOKLET A)

Additional material: Optical Answer Sheet (OAS)     **Total Time for Booklet A and B: 1hr 40min**

**INSTRUCTIONS TO CANDIDATES**

1. Write your name and class at the top of this page.
2. Do not turn over this page until you are told to do so.
3. Follow all instructions carefully.
4. Answer all questions.
5. Shade your answers in the Optical Answer Sheet (OAS) provided.

This booklet consists of 9 printed pages.



26

www.testpapersfree.com